# நண்ணுக நூறாண்டு; நாளையும் நாடாண்டு!





வாலாட்டி வருகின்ற
வடபுலத்து அரசுக்குத்
தாலாட்டுப் பாடாத
தலைவர்கள் வழிவந்த
வேலாட்டத் தளபதி
வெல்கின்ற களபதி
கோலாட்டக் குரிசிலே
கொண்டாடி
வாழ்த்துவோம்!

பாலாற்றுக் காஞ்சியில்
பயின்றெழுந்த அண்ணாவின்
சேலாட்டக் காவிரிபாய்
திருவாரூர்க் கலைஞரின்
நூலாட்ட ஈரோட்டு
நுண்ணறிவுப் பெரியாரின்
காலொற்றி வருபவரே,
கழகத்தின் தலைவரே!
நாலெட்டுத் திசைபோற்றும்
நாயகரே, தங்களின்
மேலான பிறந்தநாள்
மிளிர்கின்ற சிறந்தநாள்!

நீலவான் போல்விரிந்து
நெடுங்கடல் போல்பரந்து
ஆலமரம் போல்படர்ந்து
ஆதவன் போல்ஒளிர்ந்து
கோலநிலா போல்குளிர்ந்து
கொடைக்காற்றுப் போல்வளர்ந்து
காலமெலாம் நிலைக்கவே
கழகந்தான் காக்கவே
சாலமிக வாழ்கவே;
தன்மானம் வளர்கவே!

தொடுத்தபோர் அனைத்திலும்
துவளாத வெற்றியைக்
கொடுத்தவன் கரிகாலன்,
கொடுமுடி இமயத்தில்
விடுத்தவன் புலிக்கொடி
வென்றவன் வடபுலம்!
தடுத்தவர் வீழ்ந்தனர்;
தாள்பணிந்து வணங்கினர்!
எடுத்தவாள் எப்போதும்
எதிரிகளை வீழ்த்தினாற் போல்
படுத்தவர் உம்மாலே
பலபேர்கள்; தேர்தலில்
அடுத்தவர் உமைவெல்லல்
ஆகாமல் அரசியலை
விடுத்தவர் பலராக
வெற்றித்தேர் விரைபவரே!

இந்திமொழித் திணிப்பிங்கே
இம்மியும் இல்லாமல்
அந்தநாள் முதலாக
அயராமல் எதிர்க்கின்ற
செந்தமிழ் நாட்டினை,
திராவிட இனத்தினை
வந்தவர் ஆரியர்
வஞ்சக வலைமீட்ட
சந்ததியில் வந்தவரே!
தளபதியே, தங்களின்
சிந்தனையில் பிறந்தபல
சீரான திட்டங்கள்
தந்தின்று முன்னிலையில்
தமிழ்நாட்டை உயர்த்துகையில்

மந்தரைபோல் சகுனிபோல்
மனங்கெட்ட போர்வழிகள்
தொந்தரவு செய்தாலும்
சூழ்ச்சிவலை விரித்தாலும்
சந்துவழி புகுவோர்கள்
சங்கடங்கள் புரிந்தாலும்
முந்துவீர், எப்போதும்
முதல்வராய்
முழுங்குவீர்!

பந்தாடத் துடிக்கின்ற
பண்பிலா ஒன்றியத்தின்
தந்திரங்கள் பலிக்காமல்
சமரின்றித் தடுக்கின்றீர்!
மந்திரங்கள்
மாயங்கள்
மடமைகள் இல்லாமல்
சொந்தவழி செல்கின்ற
துணிச்சலுடன்
எழுகின்றீர்!

நந்தவனத் தோட்டத்து
நறுமலர்கள் சூட்டுவோம்,
சந்தனம் கூட்டுவோம்,
தமிழிசை மீட்டுவோம்
சிந்துகள் பாடுவோம்,
சிலம்பிசைத்து ஆடுவோம்!
வந்ததொரு பிறந்தநாள்
வளர்கவென வாழ்த்துவோம்!

மும்மொழிக் கொள்கையை
முற்றிலும் முறியடிக்கும்
செம்மொழி கண்டவர்
செல்வரே; ஒருநாளும்
தம்மொழி இழப்பவர் தலைதூக்கல்
இயலாது;

இம்மாநிலத்திற்கு
இருமொழிக் கொள்கையே
செம்மையாம் என அண்ணா
தீட்டிய சட்டத்தைத்
தம்பிகள் காத்திடுவர்;
தமிழையே போற்றிடுவர்
நம்பிக்கை யுடன்அண்ணா
நவின்றதில் உறுதியாய்



பேராசிரியர்
மா.செல்வராசன்

வெம்பகை வந்தாலும்
வெற்றியுடன்
முடிக்கின்ற
சிம்மமாய், சிம்புள்ளாய்ச்
சிறகடித்துத் திகழ்கின்ற
பெம்மானாம் தளபதியார்
பெருமிதப் பிறந்தநாள்
கொம்பூதி வரவேற்போம்;
கொண்டாடி வாழ்த்துவோம்!

கார்முகில் உம்முடைய
கட்டளைக்கு இணங்கியே
நீர்மழை பொழிகிறது,
நிறைந்தெங்கும் வழிகிறது,
ஊர்தோறும் பசுமைதான்
ஓங்கியே திகழ்கிறது,
சீர்கொண்டு நிலமெலாம்
செழிப்பிலே திளைக்கிறது;
ஏர்கொண்ட உழவரின்
இல்லமோ களிக்கிறது,
பார்கண்ட தொழிற்சாலை பற்பல
எழுகிறது,

யார்என்றும் பாராமல்
யாவர்க்கும் பயனாக
நேர்கொண்ட ஆட்சியில்
நிதம்பல புதுமைகள்
பார்கண்டு வியக்கிறது;
பாராட்டி மகிழ்கிறது!

வேர்கொண்ட கழகத்தின்
வெற்றிமிகு தலைவராய்ப்
போர்வழிப் பெரியாரின்
புதுவழி கண்டவர்
பேரறிஞர் அண்ணாவின்
பேராற்றல் கலைஞரின்
சீர்வழி செல்கின்றீர்,
செயலாலே வெல்கின்றீர்,
ஓர்மொழி சொல்கின்றீர்
உங்களில் ஒருவனெனப்
பேர்பெற்றீர்; மக்களிடம்
பெரும்புகழ் பெறுகின்றீர்!
தேர்பெற்ற வேந்தன்போல்
செந்தமிழ்ப் புலவன்போல்
நீர்உயர்ந்தீர், பிறந்தநாள்
நிறைந்துநூறு
ஆகுகவே;
கூர்மதி விளங்கவே
குவலயம் ஆள்கவே!

தண்காவிரி வற்றாமல்
தண்ணீராய்ப் பெருகுதல்போல்
பண்ணிசை நற்றமிழ்ப் பாட்டாகப்
பரவுதல்போல்

ஒண்கதிர் வைகலும்
உலகெலாம் ஒளிர்தல்போல்
வெண்மதி காரிருள்
விளக்காக விளங்குதல்போல்
விண்வெளி எங்கெங்கும்
விரவியே விரிதல்போல்
மண்ணுலவும் உயிர்க்காற்று
மல்கியே வளர்தல்போல்
வண்கடல் மேன்மேலும்
வழிந்துயர்ந்து மிகுதல்போல்

கண்ணியம் நற்கடமை
கட்டுப்பாடு என்கின்ற
அண்ணாவின் கட்டளைகள்
அன்றாடம் இலகல்போல்
திண்மையாய் என்றென்றும்
திராவிடமாய்த் திகழ்கவே!
வண்மைகள் தமிழ்நாட்டில்
வளர்ந்தோங்க ஆள்கவே!

உண்மையில் நீர்ஒரு
ஒப்பற்ற தலைவராம்;
எண்ணிடில்
என்றும்நீர்
இணையிலா முதல்வராம்;
தொண்டெனில் என்றுமே
துவளாத இளைஞராம்;
கண்டபல தலைவருள்
கதிரவன் நீரேதாம்!
விண்டபடி செய்கின்ற
விழுமியர் நீரன்றோ!

பெண்ணரசி துர்காவின்
பெருந்துண இனிமையுடன்
நண்ணுக நூறாண்டு;
நாளையும் நாடாண்டு!

---

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் அளிக்கும் 'திராவிட மாடல்' அரசு!

## இந்தியாவில் பிற மாநிலங்களும் நாளை இதைப் பின்பற்றும் நிலை ஏற்படும்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 2 -

அனைத்திலும் முத்திரை பதித்து வரும் தமிழ்நாடு, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் கொடுக்க முன்வந்திருக்கிறது. இந்தியாவில் பிற மாநிலங்களும் நாளை இதையே பின்பற்றும் நிலை ஏற்படும் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.



தினகரன்
மார்ச் 1, 2025 சனிக்கிழமை
சமூக நீதி அரசு

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் 50 சதவீதமாக ஏற்கனவே உயர்த்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. இதன்மூலம் அரசியலில் பெண்களுக்கான இடத்தை தவிர்க்க இயலாததாக மாற்றி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் சரி பாதியாக பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்திய நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை 33 சதவீதமாக உயர்த்த பல ஆண்டுகாலம் போராட வேண்டிய நிலை ஏற்பட்டு ஒரு வழியாக நாடாளுமன்றத்தில் சமீபத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனாலும் இன்னும் நடைமுறைப்படுத்தாத சூழல்தான் இருந்து வருகின்றது.

இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் நீதிக் கட்சி ஆட்சியில் 1921ம் ஆண்டு பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் தீர்மானம்

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் 50 சதவீதமாக ஏற்கனவே உயர்த்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. இதன்மூலம் அரசியலில் பெண்களுக்கான இடத்தை தவிர்க்க இயலாததாக மாற்றி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் சரி பாதியாக பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்திய நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை 33 சதவீதமாக உயர்த்த பல ஆண்டுகாலம் போராட வேண்டிய நிலை ஏற்பட்டு ஒரு வழியாக நாடாளுமன்றத்தில் சமீபத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனாலும் இன்னும் நடைமுறைப்படுத்தாத சூழல்தான் இருந்து வருகின்றது.

இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் நீதிக் கட்சி ஆட்சியில் 1921ம் ஆண்டு பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இந்தியாவிலேயே முதல் முறையாக பெண் எம்.எல்.ஏ.வாக தமிழ்நாட்டில் இருந்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேர்வு செய்யப்பட்டார். 1929ம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். இப்படி பெண்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு என்றைக்குமே முன்னோடியாக விளங்கி வந்துள்ளது.

பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை இன மக்களுக்கும், பெண்களுக்கும் அனைத்து அதிகாரமும் கிடைக்கும் நோக்கத்தோடு உருவானதுதான் திராவிட இயக்கம். இந்த இயக்கத்தின் இலக்குகளை மெய்ப்பிக்கும் திராவிட மாடல் ஆட்சியானது திருநர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், விளிம்பு நிலை மக்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்கி அதிகாரங்களை கொடுத்து அழகு பார்த்து வருகின்றது. அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற மகத்தான ஒரு அறிவிப்பை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

வெறும் அறிவிப்போடு நின்று விடாமல், வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையிலான சட்டத்திருத்தமும் கொண்டு வரப்படும் என்று உறுதியை கொடுத்துள்ளார். இதன் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் இடம்பெறுவது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இனி மாற்றுத்திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளில் நிச்சயம் ஒலிக்கும். அதிலும் முக்கியமாக விளிம்பு நிலை மக்களான மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் பொருந்திய அவைகளில் இடம் பெறுவார்கள் என்று தமிழ்நாடு முதல்வர் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

சமூக நீதி என்பது ஏதோ ஒரு அரசியல் மற்றும் தத்துவக் கோட்பாட்டை மட்டும் குறிப்பது அல்ல. அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான். கல்வி, சுகாதாரம், பெண் உரிமை, பொருளாதார வளர்ச்சி, பாலின சமத்துவம் என அனைத்திலும் முத்திரை பதித்து வரும் தமிழ்நாடு, மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் கொடுக்க முன்வந்திருப்பது என்பது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பாக பார்க்கப்படுகிறது. நாளை பிற மாநிலங்களும் இதை நிச்சயம் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படும். இது மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் மாற்றம் காண வழிவகுக்கும். இதற்கான விதை தமிழ்நாடுதான் என்று நாளைய வரலாறு கூறும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

## "நல்ல உடல் நலத்துடன் - முதல்வரின் பொதுவாழ்வு தொடர வாழ்த்துகிறேன்!"

பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு வாழ்த்துச் செய்தி!



**சென்னை, மார்ச் 2 -**

**"நல்ல உடல் நலத்துடன் தங்களின் (முதல்வரின்) பொதுவாழ்வு தொடர வாழ்த்துகிறேன்!" என்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு :-

"தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று 72ஆம் பிறந்தநாள் கொண்டாடும் நிலையில், அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல உடல் நலத்துடன் அவரது பொதுவாழ்வு தொடர வாழ்த்துகிறேன்."

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் மருத்துவர் இராமதாசு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.